இருந்துது யென்று அனவறுங்கூடி சொன்னார்கள். யெண்ணைமங்கலத்திலே யிறுக்கும் ஆனைமலை காளியணனுக்கு சாதி பட்டயம் குடுத்து பாகு பச்சடமும், ரெட்டபடி பாக்கு வெத்திலையும், குதிரை, குடை, தீவட்டியும், ஒத்தைக் கொம்பும், ஒத்தை துடுமமும், தப்பட்டை, கட்டகயரும், வெட்டவாளும், அடிக்க ஆத்தி யாக்கையும், அஷ்ட்டாவுதாரமும், வேண்டிய விருதுகளும், அளியாத தறும்மமும் சிலாசாதன பட்டயமும் அமுந்தது.

கலியுக சகார்த்தம் பிறமாதி வருஷம் கோவுணாண்டி வமுசத்துக்கு பெரியதனம் நல்லுரிக்கி நாட்டுக்கு பளனியாண்டிகோவில் குறுஞ்சேரியம்மன் குறுப்பு நாட்டுக்கு குமறாண்டி விசையமங்கலம் விசையாபுரியம்மன், ஆறுநாடு பெறுமாநூரு கொண்டத்துக் காளி, வாறக்க நாடு பொயிங்கறாண்டி கோவில் பொயிங்காளியம்மன், ஆனைமலை நாடு நல்லாண்டி தெக்குலூரம்மன், காவிலிக்க நாடு உடையாண்டி காப்பாடியம்மன், ஆறுநாடு சோளியாண்டி சோளியம்மன், வொடுவெங்க நாடு காளியாண்டி கோவில் வஞ்சியம்மன் மயிலாப்பூரில் கோவின்வயற்றில் பிறந்தபடியினாலே ஆருகட்டி பின்குடுமி பூணூலு சித்தானந்தமாக 1700 வருஷம் மாயச்செடுங் கூடியிருந்து நன்மை தின்மைக்கு தள்ளின பேறகளை கொங்கலம்மன் விசாறிப்பாள். சித்திரை மாதம் 1 தேதி வெள்ளிக்கிழமை நவமியும் பொருந்தின சுபதினத்தில் பிறந்த கலியுகம் ஆண்டவர் பரிச்சித்து றாசன் 300 வருஷம், செனமீகறாசன் 300 வருஷம், நறேந்திறறாசன் 298 வருஷம், சாறங்கறாசன் 51 வருஷம், சத்திரியன் விக்கிரமாதித்தன் பட்டி அதிகாரமானது 1296 வருஷம் மேல் செல்லாநின்ற விசுவ வருஷம் பங்குனி மாதம் 22 தேதி சுக்குறவாறமும் திசமியும் திருவோண நட்சத்திரமும் துலா லக்கினமும் பொரிந்தின சுபதினத்தில் சாதி பட்டயமும் யெளுதிவச்சு அந்த பட்டயத்துக்கு வும்பளிக்கை சறுவமானியமாய் நடந்து வரும்படிக்கி அறுமுளை நல்லூரு இங்குற கிறாமமும் யென்றென்றைக்கும் நடக்குறபடிக்கி கல்வெட்டு போடுவச்சு குடுத்து ஆள்சிலவுக்கு காறக்காட்டு வேளாளர், சேறகுல வேளாளர், சோளிய வேளாளர், தென்திசை வேளாளர், பறமுத்தி வேளாளர், நறம்பு வேளாளர், படைத்தலை வேளாளர், பாலை வேளாளர், தொளுக வேளாளர், பள்ளி வேளாளர், உடும்பரை வேளாளர், மலைகண்ட வேளாளர், கங்கா பவானிக்கு அடுமை பட்ட கெங்கடி வேளாளர், குடி வுக்கிலியற், ரெட்டி வேளாளர், பச்சை மலையாளன், பவள மலையாளன், கொடிகால் வேளாளர், சயின வேளாளர் இந்த வகை வேளாளர் யேற்கட்டி குடித்தனம் செய்யும் குடியானவர்களுக்கு அன்றாடகம் சீற்மையிலே வெளங்கத்தக்கின பணம் ஞமது ஏறுக்கு ஒரு பணம், குதிரைக்கு ஒரு வள்ள கொள்ளும் குடுத்து அட்டி செய்யாமல் தடுத்து வரவும்.

வேளாஞ் செட்டி, கொங்க செட்டி, நகற செட்டி, பனிரண்டாஞ் செட்டி, மூத்தாரு செட்டி, கன்னடிய செட்டி, தெலுங்க செட்டி, கவறை செட்டி இவர்களுக்கு தலைக்கட்டுக்கு வருஷத்துக்கு ஒரு பணமும் அட்டியில்லாமல் குடுத்துவரவும். அகம்படியற் கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு மூணு பணமும், 300 பாக்கு 300 வெத்திலையும், மூணு சீப்புப் பளமும், ஒரு தேங்காயும், பெண் வீட்டுக்கு யிந்தப்படி குடுத்து வரவும். செங்குந்தை கோத்திரத்தில்